**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, THARANGAMBADI.**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXV of BNSS)

**C.C.No.85/2019**

| | | | |
|---|---|---|---|
| Deposition of LW 1 | | Examined as : PW 1 | |
| Name | : பேபி கமலா | Defence | : |
| Father/Husband Name | : முத்துகுமாரசாமி | Court | : |
| Village | : மேல பெரம்பூர் | Taluk | : |
| Calling | : | | |
| Age | : 75 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act Bharathiya Shakshiya Adhiniyam the day 06.06.2025.

சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

1,3 எதிரிகள் ஆஜர். 2 வது எதிரி இறந்துவிட்டார், 4 வது எதிரி ஆஜர் இல்லை.( பிரிவு 355 BNSS ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது )

<u>முதல் விசாரணை:-</u>

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து வீட்டு குடித்தனம் செய்து வருகிறேன். 2017 ம் வருடம் தேதி, மாதம் நினைவில் இல்லை. ஒரு நாள் இரவு நானும் எனது மகன், மருமகள் மற்றும் ஒரு வயதுடைய பேரக்குழந்தையும் வீட்டில துாங்கி கொண்டிருந்த போது இரவு 1.00 மணியளவில் 4 நபர்கள் எங்கள் வீட்டு தாள்பாலை உடைத்து எங்கள் வீட்டிற்குள் நுழைந்த எனது மகனை அருவாளால் காலில் கீறிவிட்டார்கள். என்னை கீழே தள்ளிவிட்டார்கள் நான் கீழே விழுந்ததில் எனது இடது கை தோள்பட்டையில் எலும்பு முறிவு ஏற்பட்டது. எனது கழுத்தில் இருந்த 5 பவுன் செயினை அறுத்து கொண்டு சென்றார்கள். எனது வீட்டிற்குள் வந்து எங்களை தாக்கி செயினை அறுத்து சென்ற நபர்கள் இருட்டு நேரம் என்பதால் அவர்கள் யார் என்று தெரியவில்லை. இது சம்மந்தமாக நான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். நீதிமன்றத்தில் தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையது தான், **அந்த புகார் மனு அ.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் என்னை விசாரித்தார்கள். போலிசார் ஒருநாள் எனக்கு போன் செய்து எனது செயின் கிடைத்து விட்டதாகவும் அதை அடையாளம் காட்ட சொல்லி என்னை காவல் நிலையத்திற்கு அழைத்தார்கள், நான் காவல் நிலையம் சென்று எனது செயினை நான் அடையாளம் காட்டினேன்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

நான் எனது முதல் விசாரணையில் கூறியுள்ள விபரங்களை போலிசார் விசாரணையிலும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். புகாரை நான் எழுதவில்லை என்றால் சரிதான்.

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, THARANGAMBADI.**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXV of BNSS)

**C.C.No.85/2019**

| | | | |
|---|---|---|---|
| Deposition of LW 2 | | Examined as : PW 2 | |
| Name | : சிவகுரு | Defence | : |
| Father/Husband Name | : முத்துகுமாரசாமி | Court | : |
| Village | : மேல பெரம்பூர் | Taluk | : |
| Calling | : | | |
| Age | : 43 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act Bharathiya Shakshiya Adhiniyam the day 06.06.2025.

சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

1,3 எதிரிகள் ஆஜர். 2 வது எதிரி இறந்துவிட்டார், 4 வது எதிரி ஆஜர் இல்லை.( பிரிவு 355 BNSS ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது )

முதல் விசாரணை:-

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து விவசாய வேலை செய்து வருகிறேன். 2017 ம் வருடம் ஜூன் மாதம் தேதி நினைவில் இல்லை, நானும் எனது குடும்பத்தாரும் வீட்டில் துாங்கி கொண்டிருந்த போது இரவு 1.10 மணியளவில் எனது அம்மா என்னை கூப்பிட்டார் நான் உடனடியாக எழுந்து சென்று பார்த்தபோது எங்களது வாசல் கதவை உடைத்து கொண்டிருந்தார்கள் நானும் எனது அம்மாவும் அந்த கதவை தடுத்த போது அந்த கதவு உடைந்து எனது அம்மா கீழே விழுந்துவிட்டார்கள் அதில் எனது அம்மாவிற்கு கையில் எலும்பு முறிவு ஏற்பட்டது. 2,3 நபர்கள் வீட்டிற்குள் வந்தார்கள். எங்களது வீட்டின் ரூம் கதவை உடைக்க முற்பட்டார்கள், எனது மனைவி அறையை தாழிட்டு கொண்டதால் அவர்களால் உடைக்க முடியவில்லை உடனடியாக எனது அம்மாவின் கழுத்தில் இருந்த செயினை பறித்து கொண்டு சென்றுவிட்டார்கள். இருட்டாக இருந்ததால் வந்த நபர்கள் யார் என்று எங்களால் பார்க்க இயலவில்லை. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

நான் எனது முதல் விசாரணையில் கூறியுள்ள விபரங்களை தான் போலிசார் விசாரணையிலும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.